*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **24 பிப்ரவரி, 2025**

**பத்திரிகை செய்தி**

புதுச்சேரி காவல்துறை சார்பில் மக்கள் குறை தீர்ப்பு நாள் "மக்கள் மன்றம்" தொடக்க விழா கதிர்காமம், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இன்று (24.02.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மக்கள் மன்றத்தை தொடங்கி வைத்தார். மேலும், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் புதுச்சேரியில் உள்ள பள்ளிகளில் புகார் பெட்டி நிறுவும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

புதுச்சேரியில் உள்ள சிறந்த காவல்நிலையங்களுக்கு ISO தரச் சான்றுகளை வழங்கியதோடு சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு "சூப்பர் காப்ஸ்" விருதுகள் வழங்கி கௌரவித்தார். விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு KSP ரமேஷ், காவல்துறை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், தலைமை அதிகாரி திரு அஜித் குமார் சிங்லா, துணைத் தலைமை அதிகாரி திரு சத்திய சுந்தரம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.